Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஞூ ஆனி மீ 9 ஆம் உ சனிக்கிழமை (23 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 29 ஓசை 125

## ஸ்ரீலங்கா கோயல்பஸ் ரஞ்சன்

(கொழும்பு)

எனது தலையைக் கொண்டுவரும்படி பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் சுவ ரொட்டிகளை ஒட்டியுள்ளார். அவர் உயிருடன் இருந்தால் வெளியே வரட்டும் இதுவே எனது பதில் என ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜேயரத்னா வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் இறந்து விட்டதாக நீங்கள் கூறியது உண்மை தானா எனக் கேட்டதற்கு பதிலளிக்கும்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவின் இன்றைய நிலைபற்றியும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது பற்றியும் வெளிநாட்டுத் தூதுவருக்கு விளக்கிக் கூறுகையில் மேற்கூறிய வினா எழுப்பப்பட்டது.

மேலும் அவர் பதிலளிக்கையில் சண்டையில் இறந்த இராணுவ வீரர்களின் சடலங்களை எடுத்துச்செல்ல விடுதலைப்புலிகள் இராணுவத்தினருக்கு அனுமதி அளிக்கவில்லை எனவும் ஆனால் இறந்த விடுதலைப்புலிகளின் சடலங்களை எடுத்துச்செல்ல இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தொண்டா அரசை கண்டிக்கிறார்
## மலையக இளைஞர் கைதின் எதிரொலி!

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் கலவரங்கள் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று அரசாங்கம் கூறி வந்த போதிலும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப் படுவதைப் பார்த்தால் அரசாங்கம் தனது கூற்றை எப்போதோ வாபஸ் வாங்கி விட்டது போலவே தோன்று (4 ஆம் பக்கம் பார்க்க)

### வாகனம் கண்டுபிடிப்பு

(சென்னை)

சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகளை கொலை செய்துவிட்டுசெல்லப் பயன்படுத்திய வாகனம் ஒன்று தஞ்சை மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. வைக்கோலினால் மறைக்கப்பட்ட நிலையில் அது காணப்பட்டது. இந்தக் காரில் வந்த போரா (4ஆம் பக்கம் பார்க்க)

### ரஞ்சன்தொண்டா குழப்பம்

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ்த் தோட்டத்தொழிலாள இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு வருவது ஸ்ரீலங்காவின் பிரேமதாசா அரசாங்கத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப் படுகிறது, (4 ஆம் பக்கம் பார்க்க)

# உட்பூசலே நாபா குழுவின் கொலை!

## புலிகள் மீது ஏன் வீண் பழி
## தலைமைச்செயலகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் நாட்டில் ஈ. பி. ஆர். எல். எப். தலைவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு தமிழ்நாட்டு எதிர்க்கட்சியினரும் சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகள் மீது எந்த விசாரணையும் முடியும் முன்னரே குற்றஞ்சாட்டுகின்றனர். இக் கொலைகளுக்கு ஈ- பி. ஆர். எல். எப். விலுள்ள உட்பூசலும் தலைமைப்பதவிப் போட்டியும் சிறிலங்கா அரசுமே காரணம் என்று நாம் சந்தேகிக்க இடமிருக்கிறது" என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையொன்று கூறுகின்றது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

ஈ. பி. ஆர். எல். எவ் இன் தலைவர்கள் பதினாறு பேர் கடந்த செவ்வாய்க் கிழமை (19. 6. 90) அன்று தமிழ் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தமிழீழத்தில் இன்று இனப் படுகொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழீழத்தில் நடக்கும் இனப்படுகொலைகளை எதிர்த்து தமிழ் நாடு குரல் தருவதை தடுககவும் தமிழீழத்தில் நடக்கும் இனப்படு கொலைகளை மறைக்கவுமே இக் கொலைகள் நடத்தப்பட்டுள்ளது.

### நாபாவுக்கு பதில் பிரேமச்சந்திரன்

(சென்னை)

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் புதிய தலைமைச் சயலாளராக அந்த இயக்கத்தின் முக்கியப் பிரமுகரும் யாழ். மாவட்டஎம்.பியுமான திரு.க. பிரேமச்சந்திரன் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

மேற்படி இயக்கத்தின் இப் பதவியை வகித்து வந்த திரு (4 ஆம் பக்கம் பார்க்க)

### யோகசங்கரியின் சடலம் லண்டனுக்கு

(சென்னை)

சென்னை கோடம்பாக்கத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ. பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் முக்கியப் பிரமுகரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான திரு க. யோகசங்கரியின் சடலம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

யோகசங்கரியின் மனைவி உறவினர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்கவே சடலம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது.

### தேசிய பாதுகாப்பு நிதி

(கொழும்பு)

மீண்டும் சிறிலங்கா அரசாங்கம் தேசியபாதுகாப்பு நிதியை ஆரம்பித்துள்ளது. பல நிறுவனங்கள்

# வள்ளங்களிலும் தப்பி வருகை!

## திருமலைத் தமிழர் பரிதாபம்

(முல்லைத்தீவு)

திருக்கோணமலைப் பகுதியில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் அட்டகாசங்களினால் அப்பகுதியில் வாழும் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான பிரதேசங்களைத்தேடி புலம் பெயர்ந்த வண்ணமிருக்கின்றனர். தினமும் 15 வள்ளங்கள் திருக்கோணமலையிலிருந்து அகதிகளுடன் வந்து முல்லைத்தீவில் செம்மலை, அலும்பில் ஆகிய இடங்களில் அகதிகளை இறக்கியவண்ணம் இருக்கின்றன. திருக்கோணமலையிலிருந்து வந்த படகு அகதிகள் கடலோரக் கிராமங்களான செம்மலையிலும், அலும்பிலும், 4ஆம் கட்டை, 5ஆம் கட்டையிலும் தங்கியுள்ளனர். பெரும் பகுதியான அகதிகள் அங்கு தங்கியிருந்த போதிலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று தமிழரும் சிங்களவரும் அகதிகளாகினர்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியிலிருந்தும், சிங்களப் பகுதிகளை அண்டிய கிராமப்பகுதிகளிலிருந்தும் சுமார் ஐயாயிரம் தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். ஐயாயிரம் குடும்பங்களையும் சேர்ந்தவர்கள் இருபத்தையா

# தலைமைச்செயலகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் நாட்டில் ஈ. பி. ஆர். எல். எப். தலைவர்கள் கொலை செய்யப்பட்டதற்கு தமிழ்நாட்டு எதிர்க்கட்சியினரும் சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகள் மீது எந்த விசாரணையும் முடியும் முன்னரே குற்றஞ்சாட்டுகின்றனர். இக் கொலைகளுக்கு ஈ. பி. ஆர். எல். எப். விலுள்ள உட்பூசலும் தலைமைப்பதவிப் போட்டியும் சிறிலங்கா அரசுமே காரணம் என்று நாம் சந்தேகிக்க இடமிருக்கிறது" என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையொன்று கூறுகின்றது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

ஈ. பி. ஆர். எல். எவ் இன் தலைவர்கள் பதினாறு பேர் கடந்த செவ்வாய்க் கிழமை (19. 6. 90) அன்று தமிழ் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தமிழீழத்தில் இன்று இனப் படுகொலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழீழத்தில் நடக்கும் இனப்படுகொலைகளை எதிர்த்து தமிழ் நாடு குரல் தருவதை தடுக்கவும் தமிழீழத்தில் நடக்கும் இனப்படு கொலைகளை மறைக்கவுமே இக் கொலைகள் நடத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் எப்போதும் கட்டுப்பாட்டுடனும் அந்த நாட்டின் சட்டதிட்டங்களை மதித்துமே நடந்து வந்திருக்கின்றனர்.

தமிழ் நாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ போராட்டத்திற்கும் ஆதரவு தருவதை கண்டு பொறுக்காத எதிர்கட்சிகள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் மீது எதற்கெடுத்தாலும் குற்றம் சுமத்துகின்றனர்.

அண்மையில் நடந்த இக் கொலைகளுக்கு காரணமானவர் யார் என்பதை சரியாக அறியுமுன்பே இவர்களும் சிறிலங்கா அரசும் புலிகளை குற்றம் சாட்டுவது இதைத் தான் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நேரத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இக் கொலைகளுக்குப் பின்னால் உட் பூசல்களும், தலைமைத்துவப் போட்டியும், சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் முக்கியப் பிரமுகரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான திரு க. யோகசங்கரியின் சடலம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யோகசங்கரியின் மனைவி உறவினர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்கவே சடலம் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

## தேசிய பாதுகாப்பு நிதி

(கொழும்பு)

மீண்டும் சிறிலங்கா அரசாங்கம் தேசியபாதுகாப்பு நிதியை ஆரம்பித்துள்ளது. பல நிறுவனங்கள் ஆயிரக்கணக்கிலும் இலட்சக்கணக்கிலும் இதற்கு நிதி வழங்குவதாக சிறிலங்கா அரசு அறிவித்துவருகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 10இராணுவம்பலி

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட கொண்டஞ்சி முகாம் நோக் அனுராதபுரத்தில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலினால் பத்திற்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

## சாரதி பலி

(வாகரை)

மட்டக்களப்பில் வாகரை என்னுமிடத்தில் நேற்றுப் பிற்பகல் ஹெலி தாக்கியதால சாரதி ஒருவர் பலியானார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் வாழைச்சேனையைச் சேர்ந்தவர்.

## கிளைமோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

சந்திவெளி ஏற்றம் என்னும் இடத்தில் இலங்கையின் விசேட அதிரடிப்படை மீது விடுதலைப் புலிகளினால் கிளைமோர் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. சேதவிபரம் தெரியவில்லை.

# காகித ஆலை அகதிமுகாமில் சிப்பாய்கள் காடைத்தனம்

(வாழைச்சேனை)

வாழைச்சேனைக் காகித ஆலையில் இருந்த அகதிகள் முகாமுக்குள் நேற்று முன் தினம் இரவு புகுந்த சிறிலங்கா சிங்கள இராணுவத்தினர் சிலர் அங்கிருந்த இளம் பெண்கள் ஐவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்று மான பங்கம் செய்ததுடன் அவர்களின் உடம்பில் சிகரெட்டுக்களினால் சுட்டுக்காயப்படுத்தியதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

வாழைச்சேனையில் புகுந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# உணவு பெற அனுமதி ஆனால் சூடு நிற்கவில்லை

(வவுனியா)

கடந்த புதன்கிழமை (20-06-90) இராணுவ அதிகாரியினால், சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உணவு முத்திரைக்கான உணவுப் பொருட்களை களஞ்சிய அறையிலிருந்து எடுத்துச் செல்லுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வவுனியா அரசாங்க அதி

(4ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் கஜுபாம் தாக்குதலில்

# 7 இராணுவம் பலி; பவல் கவச வாகனமும் ஆயுதங்களும் மீட்பு!

(மன்னார்)

கடந்த வியாழன் அதிகாலை 4-30 மணியளவில் சிலாபத் துறையில் உள்ள கஜுபாம் இராணுவ முகாம்மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டு அதனைப் பூரணமாகத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர் இதில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தாக்குதலில் சேதமடைந்த பவல் வாகனம் உட்பட பெருந் தொகையான ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் மீட்கப் பட்டன. பல இராணுவத்தினர் முகாமை விட்டு தப்பியோடி விட்டனர்.

இவ் இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம்:

30 கலிபர் 2, ரவைகள் 3500, ஆர். பி. ஜி ,எல். எம் ஜி. 1, ரவைப்பெட்டி 10, 60 எம். எம்.மோட்டோர் 3, ஷெல்10, 2 அங். மோட்டோர் 1, ஷெல் 30, சொட்கன் 116, ரி 56-2 வகை 5, ரி56-1 வகை 3 ரி.18 வகை1; ஆர். பி. ஜி. 2,ஷெல் 27, ஜே. ஆர். கிரனைட் 25, எம். ஐ. ரவைகள் 10600 என்பனவும், சேதத்திற்குள்ளான பவல் வாகனமும் கைப் பற்றப்பட்டது.

## வீர வணக்கங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கஜுபாமில் ஏற்பட்ட மோதலில் பன்னிரெண்டுவிடுதலைப் புலிகள் இறந்ததாகவிடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் மேஜர் வசன், கப்டன்தனபால், லெப் சுகமணி, லெப். கோபிநாத், சாந்தா, ரமணி, சுமித்திரன், பயிஸ், பாஞ்சால், மேனன், டிக்கஞ்சி குபேரன் ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

(முல்லைத்தீவு)

திருக்கோணமலைப் பகுதியில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் அட்டகாசங்களினால் அப்பகுதியில் வாழும் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான பிரதேசங்களைத்தேடி புலம் பெயர்ந்தவண்ணமிருக்கின்றனர். தினமும் 15 வள்ளங்கள் திருக் கோணமலையிலிருந்து அகதிகளுடன் வந்து முல்லைத்தீவில் செம்மலை, அலும்பில் ஆகிய இடங்களில் அகதிகளை இறக்கியவண்ணம் இருக்கின்றன. திருக்கோணமலையிலிருந்து வந்த படகு அகதிகள் கடலோரக் கிராமங்களான செம்மலையிலும், அலும்பிலும், 4ஆம் கட்டை, 5ஆம் கட்டையிலும் தங்கியுள்ளனர். பெரும் பகுதியான அகதிகள் அங்கு தங்கியிருந்த போதிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் இன்று தமிழரும் சிங்களவரும் அகதிகளாகினர்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியிலிருந்தும், சிங்களப் பகுதிகளை அண்டிய கிராமப்பகுதிகளிலிருந்தும் சுமார் ஐயாயிரம் தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். ஐயாயிரம் குடும்பங்களையும் சேர்ந்தவர்கள் இருபத்தையாயிரம் பேர்வரை இருக்கும் என்று வவுனியா அரசாங்க அதிபர் திரு செ. பத்மநாதன் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களில் சுமார் இருநூறு குடும்பங்கள் தமிழ்ப் பகுதிகளிலிருந்து சிங்களக்கிராமங்களை நோக்கி அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் இவற்றில் நாற்பது குடும்பங்கள் வவுனியாவில் ஜோசெப் இராணுவ முகாமில் தஞ்சமடைந்திருக்கின்றனர்என்றும்அவர்மேலும் தெரிவித்தார்.

தமிழ் அகதிகளில் பல குடும்பங்கள் புதுக்குளம் பாடசாலையிலும் ஓமந்தை பாடசாலையிலும் தங்கியுள்ளனர் என்றும் இக் குடும்பங்களுக்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(தி)

# மக்கள் அழிவார்கள் என்று குண்டு வீசவில்லை

(கொழும்பு) - ரஞ்சன்

"நாம் குண்டுவீசி யாழ்ப்பாணத்தை அழித்துவிடலாம். ஆனால் மக்கள் அழிந்து விடுவார்கள் என்பதினாலேயே தாக்குதல்கள் மேற்கொள்ளவில்லை என நேற்று வெளிநாட்டுத் தூதுவர்கள் மத்தியில் பேசும் போது ரஞ்சன் விஜேயரட்ணா தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை நாங்கள் கொலை செய்ய விரும்பவில்லை. அவர்களும் இலங்கைப் பிரஜைகளே எனவும் ரஞ்சன் விஜேயரட்ணா தெரிவித்தார். (4 ஆம் பக்கம் பார்க்க)

# பீப்பா குண்டுவீச்சால் பல வீடுகள் தரைமட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையில் நேற்று பகல் பதினொரு மணியளவில் அவ்றோ விமானத்திலிருந்து போடப்பட்ட பீப்பாக்குண்டு ஒன்றினால் பலவீடுகள் தரைமட்டமாகின.

இந்தக்குண்டினால் முற்றாக பாதிக்கப்பட்ட வீடொன்றினுள் இருந்த மூன்று குழந்தைகள் சமையல் அறை சுவர் அலுமாரித்தட்டுகளில் படுத்திருந்ததனால் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள். இச்சம்பவத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. (4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்நகரப்பகுதி அகதிகளுக்கு உணவு வழங்க ஏற்பாடு.

யாழ். நகரப் பகுதியில்மாத்திரம் 24 முகாம்களில் தங்கி உள்ள 4500 அகதிகளுக்கு ஒரு வாரத்திற்கு போதுமான உணவுப் பொருட்கள்25ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து விநியோகிக்கப் பட இருக்கிறது. மேற்குறிப்பிட்டமுகாம்களில் தங்கி இருப்பதாக கிராமசேவை அலுவலர்களால் பதிவுசெய்யப்பட்டு உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்ட அகதிகளுக்கு மாத்திரமே இந்த உணவுப் பொருட்கள் வழங்கப்படும் என்று அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார்.

24 முகாம்களில் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி முகாம் கொழும்புத்துறை புனித ஜோசேப்கல்லூரி முகாம் குருநகர் துரையப்பா மகாவித்தியாலயம், நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகியனவே அதிக அளவில் அகதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# படகு அகதிகள் மீது இராணுவம் சூடு; 7 பேர் பலி

(திருமலை)

திருமலையில் புடவைக்கட்டு என்னும் இடத்தில் இருந்து அகதிகளாகப் படகில் முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட மக்கள் மீது புல்மோட்டை இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஏழு பொது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

மூன்று படகுகளில் வந்து கொண்டிருந்தபோது புல்மோட்டை இராணுவ முகாமில் இருந்து சென்ற இராணுவத்தினர் கடலில்வைத்தே அகதிகளைச் சுட்டனர். இதில் மூன்று குழந்தைகள், இரண்டு பெண்கள், உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

## வைத்தியவசதி இல்லை

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையிலிருந்து பல வழிகளாலும் தப்பி முல்லைத்தீவு, வவுனியா ஆகிய வன்னி மாவட்டங்களுக்கு, ஸ்ரீலங்கா அரச படைகளினாலும், சிங்களக் காடையர்களினாலும் தாக்கப்பட்டுக்காயங்களுடன் வரும் மக்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு மருத்துவமனைகள் இயங்காமல் இருக்கின்றன.

கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு.வவுனியா ஆகிய நகரங்களின் ஷெல் தாக்குதல் எல்லைக்குள் வாழும் மக்கள், ஷெல் தாக்குதல் காயங்களுக்குச் சிகிச்சை செய்துகொள்ள முடியாத நிலையில் உள்ளனர். காரணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆஸ்பத்திரிகள் இராணுவத்தின் அனர்த்தங்களால் பூட்டப் பட்ட நிலையில் உள்ளதே ஆகும்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

### இறைச்சிக் கோழி

சகல விதமான இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தி. நல்லூர் (R/343)

### தவறிவிட்டது

உடுப்புகளை அடக்கிய ஒரு Bag 21-6-90 பிற்பகல் 3.30 மணியளவில் கொட்டடியில் இருந்து கல்வியங்காட்டுக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/373)

### போட்டோஸ்ரட்

அவசரத் தேவைகளுக்கு எல்லா நாட்களிலும் காலை 6 மணி தொடக்கம் சிறந்த போட்டோஸ்ரட் பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

''யாழகம்'' பிரப்பங்குளம் ஒழுங்கை (நாவலர்சந்தி, ஐந்து சந்தி ஆகியவற்றிற்கு அண்மையில்) வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (R/372)


# காரைநகர் கடற்படையின் ஷெல் அடியும் பீரங்கி வேட்டுகளும்

## ஊர்காவற்றுறையில் சிறியபடகு கவிழ்ந்தது; மருத்துவமனை இடம்மாற்றம்

(வேலணை)

ஊர்காவற்றுறைப்பகுதியை நோக்கி கடந்த ஐந்து தினங்களுக்கு மேலாக காரைநகர் கடற்படை முகாமில் இருந்து பாரிய ஷெல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த ஷெல் தாக்குதல்களினால் பல லட்சம் ரூபாய் பெறுமதியான வீடுவாசல்கள் வர்த்தக நிலையங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன. கடந்த 19ம்திகதி செவ்வாய்க்கிழமை காலை காரைநகர் இறங்குதுறையில் இருந்து ஊர்காவற்றுறை இறங்குதுறையினை நோக்கிச் சென்ற படகொன்று காரைநகரில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலினால் நீரில் மூழ்கியது. இதனால் படகில் சென்றவர்கள் அனைவரும் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர். சிலர் நீந்தி கரைசேர்ந்ததாகவும் மற்றவர்களின் நிலை என்னவென்று தெரியவில்லையென்றும் அறியப்படுகிறது.

படகில் பெண்களும் பிரயாணம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

### வைத்தியசாலை வேலணைக்கு மாற்றம்

மேலும் தொடர்ந்து இடம் பெற்று வரும் ஷெல் தாக்குதல்களினால் ஊர்காவற்றுறையில் உள்ள மாவட்ட அரசினர் வைத்தியசாலையும் காலவரையின்றி மூடப்பட்டுவிட்டது. இங்கிருந்தநோயாளர்கள் வைத்திய அதிகாரிகள் அனைவரும் வேலணையில் உள்ள அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் மாற்றப்பட்டுள்ளனர்.

வேலணை அரசினர் வைத்தியசாலையில் போதிய அளவு மருந்துகள் கையிருப்பில் இல்லாதிருந்த போதிலும் வைத்திய அதிகாரிகள் அங்குள்ள ஊழியர்கள் வேலணை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பினால் நோயாளர்கள் பாராமரிக்கப்பட்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் ஊர்காவற்துறைப் பகுதிகளில் இருந்தும் பெருமளவில் தமிழ் மக்கள் அகதிகளாக வேலணைப் பகுதிகளில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களும் பெருமளவில் வேலணை பள்ளிவாசலில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். (14)

# பாஷையூர் பகுதியில் மீனுக்குத் தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

மீன்வாங்குவதற்காக நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் பாஷையூரை நோக்கி படையெடுத்து வருவதை நாளாந்தம் காணக் கூடியதாக உள்ளது.

தற்போதைய நிலைமைகளின்நிமித்தம் ஒரு சில மோட்டார் படகுகள் மாத்திரமே மீன் பிடிப்பதற்காக செல்வதுடன் அவைகளும் பயத்தின் காரணத்தால் தூர இடங்களுக்கு செல்லாது குறைவான மீனுடனேயே வந்து சேருகின்றன.

இதனால் இப்பகுதியில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், விலையும் பெருமளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (43)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(கொழும்புத்துறை)

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வர அம்பாள் ஆலய பரிபாலனசபை அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆலய பரிபாலன சபையின் புதுவருட உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

# பலாலி ஷெல்லினால் யாழ். நகரம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலியில் இருந்து ஏவப்படும் ஷெல்களால் யாழ். நகரில் பல வீடுகளும், கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் இறப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

யாழ். கோட்டை முகாமிற்கு ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் விநியோகிக்க முடியாமல் இருப்பதனால் கோட்டை முகாமை முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள் மீது பலாலியில் இருந்து ஷெல் ஏவப்படுகிறது.

இவைகள் எல்லாமே நகரப் பகுதியிலேயே விழுகின்றன. யாழ். நகரம் குடிமனைகள் நெருக்கமாக உள்ள பகுதியாக இருப்பதனால் ஏவப்படும் ஷெல்களுக்கு வீடுகளோ, பொதுமக்களோ தாக்குதலுக்குள்ளாக வேண்டியுள்ளது.

நேற்று முன்தினம் பலாலி

...லினால் ஐந்து சந்தியில் ஒரு பெண்மணி இறந்துள்ளார். மாட்டின் ரோட்டில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. மேலும் பல இடங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. (ம)

## மின் தடை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, மாங்குளம் பகுதிகளிலும், கிளிநொச்சியின் சில பகுதிகளிலும் மின் தடை ஏற்பட்டுள்ளது.

அதே போல யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் குறிப்பாக தீவுப்பகுதி, காரைநகர், பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளிலும் மின்தடை ஏற்


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் முன்பு அறிவித்தபடி 25. 06. 1990 இல் தொடங்கமாட்டாது. தொடங்கப்படும் புதிய


## யாழ் நகரில் தினமும் பலாலி ஷெல்

(விசேடநிருபர்)

ஐந்திற்குக்குறையாத ஷெல்கள் தினமும் பலாலியில் இருந்து யாழ் நகரை நோக்கி வருகின்றன.

நள்ளிரவு 12மணிக்கும் அதிகாலை2 மணிக்கும் இடையில் இச் ஷெல்கள் ஏவப்பட்டுவருகிறது. பாரிய அதிர்வுடன் கிளம்பும் அவை அதே அதிர்வுடன் வீழ்ந்து வெடிக்கின்றன.

நேற்று (22-6-90) வெள்ளி அதிகாலை 2மணி அளவில்

# A/L அசேதன இரசாயனம்

## S,p,d தொகுப்பு மூலகங்கள்

## தொடர் - 5

**சத்தீஸ்**

### ஐதரொட்சைட்டுக்கள்

பொதுவாக உலோக ஐதரொட்சைட்டுக்கள் கார இயல்புள்ளவை அலோக ஐதரொட்சைட்டுக்கள் அமில இயல்பு உள்ளவை.

ஐதரொட்சைட்டுக்களில் M — O — H பிணைப்புக் காணப்படும். இதன் அமில மூல நடத்தை M இன் மின் எதிர் இயல்பில் தங்கி இருக்கும்.

M இன் மின் எதிர் இயல்பு குறைவாயின் (H உடன் ஒப்பிடும்போது) M — O பிணைப்பு உடைக்கப்பட்டு M — O பிணைப்புச் சோடி இலத்திரன்கள் இலகுவாக ஒட்சிசனுக்கு வழங்கப்பட்டு பின்வருமாறு அயனாகும்.

$$M\overset{\rightarrow}{-}O-H \rightarrow M^{+} + OH^{-} \qquad (1)$$

$OH^{-}$ அயன்கள் விளைவாக்கப் படுவதால் கரைசல் மூலமாக இருக்கும்.

M இன் மின் எதிர் இயல்பு உயர்வாக இருக்கும்போது O — H பிணைப்பு இலத்திரன்கள் ஒட்சிசனால் வலிமையாகக் கவரப்படும். எனவே O — H பிணைப்பில் இருந்து H அணு புரோத்தனாக வெளியேறும் வாய்ப்பு அதிகரிக்கும்.

$$M \leftarrow \overset{\leftarrow}{O}-H \rightarrow MO^{-} + H^{+} \qquad (2)$$

கரைசல் $H^{+}$ அயன்களைக் கொண்டிருப்பதால் அமில இயல்பைக் காட்டும். மூன்றாம் ஆவர்த்தனத்தின் வழி Na → Ci ஐ நோக்கும்போது, மின் எதிர் இயல்பு அதிகரிக்கும். எனவே தாக்கம் (2) நிகழ்வதற்கான நிகழ்தகவு அதிகரிக்கும். இதனால் மூல இயல்பு குறைந்து அமில இயல்பு அதிகரிக்கும் எனவே ஆவர்த்தனத்தின் வழி அலோக இயல்பு கூடும்.

ஐதரொட்சைட்டுக்களின் இயல்பு

| சூத்திரம் | இயல்பு | NaOH உடன்தாக்க விழைவு | HCl உடன் தாக்கவிளைவு |
|---|---|---|---|
| NaOH | வன்காரம் | — | NaCl |
| $Mg(OH)_2$ | மென்காரம் | — | $MgCl_2$ |
| $Al(OH)_3$ | ஈரியல்பு | $NalNO_2 + H_2O$ | $AlCl_3 + H_2O$ |
| $Si(OH)_4$ or $H_2SiO_3$ | மென்னமிலம் | $Na_2SiO_3$ | தாக்கமில்லை |
| $H_3PO_3$ | மென்னமிலம் | $NaH_2PO_3 + Na_2HPO_3$ | தாக்கமில்லை |
| $S(OH)_6$ or $H_2SO_4$ | வன்னமிலம் | $NaHSO_4 + Na_2SO_4$ | தாக்கமில்லை |
| ClOH | அமிலம் | NaOCl | தாக்கமில்லை |

பலாலியில் இருந்து ஏவப்படும் ஷெல்களால் யாழ். நகரில் பல வீடுகளும், கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் இறப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

யாழ்.கோட்டை முகாமிற்கு ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் விநியோகிக்க முடியாமல் இருப்பதனால் கோட்டை முகாமை முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள் மீது பலாலியில் இருந்து ஷெல் ஏவப்படுகிறது.

இவைகள் எல்லாமே நகரப் பகுதியிலேயே விழுகின்றன. யாழ். நகரம் குடிமனைகள் நெருக்கமாக உள்ள பகுதியாக இருப்பதனால் ஏவப்படும் ஷெல்களுக்கு வீடுகளோ, பொதுமக்களோ தாக்குதலுக்குள்ளாக வேண்டியுள்ளது.

நேற்று முன்தினம் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் பெண்மணி இறந்துள்ளார். மாட்டின் ரோட்டில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது. மேலும் பல இடங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. (ம)

## மின் தடை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, மாங்குளம் பகுதிகளிலும், கிளிநொச்சியின் சில பகுதிகளிலும் மின் தடை ஏற்பட்டுள்ளது.

அதே போல யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் குறிப்பாக தீவுப்பகுதி, காரைநகர், பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளிலும் மின்தடை ஏற்பட்டுள்ளது.

...ளுக்கு செல்லாது குறைவான மீனுடனேயே வந்து சேருகின்றன.

இதனால் இப்பகுதியில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு

...கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஆலய பரிபாலன சபையின் புதுவருட உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் முன்பு அறிவித்தபடி 25. 06. 1990 இல் தொடங்கமாட்டாது. தொடங்கப்படும் புதிய திகதி பின்பு அறிவிக்கப்படும்.

--பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(B.1191)

## யாழ் நகரில் தினமும் பலாலி ஷெல்

(விசேடநிருபர்)

ஐந்திற்குக்குறையாத ஷெல்கள் தினமும் பலாலியில் இருந்து யாழ் நகரை நோக்கி வருகின்றன.

நள்ளிரவு 12மணிக்கும் அதிகாலை2 மணிக்கும் இடையில் இச் ஷெல்கள் ஏவப்பட்டு வருகிறது. பாரிய அதிர்வுடன் கிளம்பும் அவை அதே அதிர்வுடன் வீழ்ந்து வெடிக்கின்றன.

நேற்று (22-6-90) வெள்ளி அதிகாலை 2மணி அளவில் பலாலியில்இருந்து ஏவப்பட்ட ஐந்து ஷெல்கள்நகரில் வீழ்ந்து பல இடங்களைச் சேதப்படுத்தின.

நேற்று முன்தினம் குடும்பப் பெண்ணொருவர் பலியானது தெரிந்ததே. (21)

# சாவகச்சேரி சந்தைவளவிற்குள் இரண்டு எலும்புக் கூடுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தை வளவில் பதுங்குகுழி வெட்டியபோது அங்கிருந்து இரண்டு எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன.

1987ஆம் ஆண்டுஅக்டோபர் மாத கடைசியில் இந்தியவிமானப்படை MI24 ரக கெலிக்கொப்ரர்கள் மூலம் பொதுச் சந்தைமீது கோரமான தாக்குதல்ஒன்றை நடத்தியிருந்ததும் இந்த தாக்குதலில் எண்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்ததும் சகலரும் அறிந்த விடயமாகும்.

பொதுமக்கள்கொலை செய்யப்பட்ட அன்று இரவோடுஇரவாக சாவகச்சேரி நகருக்குள் நுழைந்த இந்திய இராணுவம் கண்டெடுத்த சடலங்களை எல்லாம் அந்தந்த இடங்களிலேயேவெட்டித்தாழ்த்துஇருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சந்தை தேங்காய்க்கடைப் பகுதியில் பதுங்குகுழி அமைப்பதற்காக நிலம் வெட்டப்பட்டபோது அங்கிருந்து இரண்டு எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (லோ)

# வவுனியா நகரை நோக்கி புலிகள் முன்னேறுகின்றனர்

(வவுனியா)

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட வவுனியா நகரப் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள்.

போராளிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே இங்கு இடம்பெற்று வரும் யுத்தத்தில், போராளிகளின் உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் ஆரம்பித்த நாளிலிருந்து இதுவரை நாற்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. தம்மில் பலர் இறந்துள்ளதாக இராணுவத்தினரே மக்கள் சிலரிடம் ஆத்திரத்தில் கூறியிருக்கின்றனர்.

போராளிகள் தரப்பில், வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் தயாபரன் உட்பட மூன்று பேர் வீர மரணமடைந்துள்ளனர். சில போராளிகள் காயமடைந்துள்ளனர்,

பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி இராணுவத்தினரால் ஷெல் பிரயோகம் இடம்பெற்று வருகிறது. இராணுவத்தினரின் கண்ணுக்கு எட்டும் பொதுமக்களில் பலர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கொல்லப்பட்டுள்ளனர்.

### ஷெல் அடியில் வீடு, கடைகள் சேதம்

வவுனியா நகரப் பகுதியில் பத்துக்குமதிகமான வீடுகள் ஷெல் பிரயோகத்தினால் சேதமடைந்துள்ளன. அதே அளவிலான கடைகளும் சேதமடைந்துள்ளன.

ஷெல் பிரயோகத்தினால் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்று செவ்வாய் இரவு எரிந்து சாம்பரானது. (தி)

1989ஆம் ஆண்டு ஜுன் 23 இல் வீரமரணமடைந்த
வீரவேங்கை கணேசின்

## ஓராண்டு நினைவு அஞ்சலி



வேங்கை என்றொரு வெள்ளியிலே - அன்று
வேட்டுக்களைத் தீர்த்திடவே பதுங்கி நின்று
எட்டப்பர் கூட்டமது எதிர் கொள்ள முடியாமல்
எட்டி நின்று ஊரறிய - உன்னை
துப்பாக்கிக் குண்டால் துளைத்தனரே - ஆனால்
துட்டர்கள் ஓடியதன் விந்தைதான் என்ன - இன்று.

ஈழத்தின் இளையவனே கணேஸ் - உடன்
ஈரமான உள்ளத்திலே - பாரமான
எம் இன்னல் பசுமரத்தாணி யானதுவோ - இல்லை
எமக்காக நீ அவதாரமானாயோ! கணேசா!

கண்டிப்பான உன் நடப்பு- பகலிரவாய்
கடினமான உன் உழைப்பு-காவியத்தில்
கால மெல்லாம் உன்னை-எம்மை
கோல மிட வைத்தனவே!

மண்ணை மீட்டெடுக்க சோராமல்- உன்
கண்ணை இமைக்காமல் காவலனாய் நின்று
இலட்சியத்தில் வழுவாத அசையாத-உன்னை
அன்னையவள் அரவணைத்தாள் யூன் 23 இல்- ஆனாலும்
இருபதும் நிரம்பாத இளையவனே-உன்
இதயம் நனைந்ததுவோ செந்நீரில்!-ஆம் நாம்
வேரூன்றி விட்டோம் அங்குஉறுதியுடன்- நாளை
வென்றிடுவோம் எம் தமிழீழமதை!

(R/375) தமிழீழ மாணவர்கள்

| | | | |
|---|---|---|---|
| NaOH | வன்காரம் | — | NaCl |
| $Mg(OH)_2$ | மென்காரம் | — | $MgCl_2$ |
| $Al(OH)_3$ | ஈரியல்பு | $NalNO_2 + H_2O$ | $AlCl_3 + H_2O$ |
| $Si(OH)_4$ or $H_2SiO_3$ | மென்னமிலம் | $Na_2SiO_3$ | தாக்கமில்லை |
| $H_3PO_3$ | மென்னமிலம் | $NaH_2PO_3 + Na_2HPO_3$ | தாக்கமில்லை |
| $S(OH)_6$ or $H_2SO_4$ | வன்னமிலம் | $NaHSO_4 + Na_2SO_4$ | தாக்கமில்லை |
| ClOH | அமிலம் | NaOCl | தாக்கமில்லை |

நீரில் ஐதரொட்சைட்டுக்களின் அயனாக்கல்

$NaOH + (நீர்) \rightarrow Na^{+}_{(aq)} + OH^{-}_{(aq)}$ வன்காரம்

$Mg(OH)_2 \rightleftharpoons Mg^{++} + 2OH^{-}$ மென்காரம்

$H_2O + NaAlO_2 + H^{+} \rightleftharpoons Al(OH)_3 \rightleftharpoons Al^{3+} + 3OH^{-}$ ஈரியல்பு

$H_2SiO_3 \rightleftharpoons 2H^{+} + SiO_3^{--}$ மென்னமிலம்

$H_3PO_3 \rightleftharpoons H^{+} + H_2PO_3^{-}$
$H_2PO_3^{-} \rightleftharpoons H^{+} + HPO_3^{--}$ மென்னமிலம்

$H_2SO_4 \rightarrow H^{+} + HSO_4^{-}$
$HSO_4^{-} \rightleftharpoons H^{+} + SO_4^{--}$ வன்னமிலம்

$HOCl \rightleftharpoons H^{+} + OCl^{-}$
$HClO_4 \rightarrow H^{+} + ClO_4^{-}$ வன்னமிலம்

ஆவர்த்தனத்தின் வழி ஐதரொட்சைட்டுக்களின்
(i) மூல இயல்பு குறையும்.
(ii) அமில இயல்பு கூடும்.
எனவே அலோக இயல்பு அதிகரிக்கும்.

பயிற்சி வினா 1

(1) NaOH, ClOH என்பவற்றின் அமில மூல இயல்புகளை ஒப்பிட்டு விளக்குக.
(2) மூல இயல்பு $Mg(OH)_2$ க்கு $Al(OH)_3$ இலும் அதிகம்.
(3) $Al(OH)_3$ ஈரியல்புள்ளது விளக்குக.

பயிற்சி வினா 2

(1) $H_2SO_4$, $H_2SO_3$, $H_3PO_4$, $H_3PO_3$, $HClO_3$, $HClO_4$, என்பவற்றின் இலத்திரன் கட்டமைப்பை வரைக.

# வெறிச்சோடிக் கிடக்கும் ரயில் கடவை கொட்டகை

(ஈச்சமோட்டை)

வடபகுதி ரயில் கடவைகளில்அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஊழியர்களின் கொட்டகைகள் தற்பொழுது வெறிச்சோடிக் காணப்படுகின்றன

இக்கொட்டகைகளில் தற்பொழுது கால்நடைகள் குடியிருந்து வருவதுடன் சிலவற்றை விஷமிகள் பிடுங்கி செல்வதும் நாளாந்தம் நடைபெற்று வருகின்றது:

வடபகுதி ரயில் நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்படி கடவை பாதுகாப்பு ஊழியர்கள் கடமைக்கு செல்லாமல் உள்ளது குறிப்பிடத்தக்கது. (43)

## அகதிகளுக்கான உடை. சேகரிப்பு

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடைகளைச் சேகரித்து வழங்கும் பணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### சிந்தனைக்கு

கருத்துக்கள் வையகத்தை ஆள்கின்றன.

- ஜேம்ஸ்கார்:பீல்ட்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 23-06-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05

## "மகனிறந்தாலும் பரவாயில்லை..."

"மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலியறுத்தால் சரி'' தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தமிழ் நாட்டிலுள்ள சில அரசியல்வாதிகளின் போக்குக் குறித்துக் கூறிய பழமொழி இது.

இதே பழமொழி இங்கு நம்மவர் சிலருக்கும் வெகுவாகப் பொருந்தும்.

1983 ஆம் ஆண்டில் இறுதியாக இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து இனியும் சிங்கள பேரினவாதிகளுடன் ஒத்து வாழ முடியாது பிரிவினைதான் ஒரேவழி என்று ஆயுதந் தூக்கியோர் பலர்.

இவர்கள் பின்னர் கொள்ளையடித்த பணத்தைப் பங்கு போட்டுக்கொள்வதிலும் தலைமைப் போட்டியாலும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கொண்டனர்.

நிலையான கொள்கையுடைய ஒரே தலைமை வலுப்பெற்று மக்கள் சக்தியை அது தனக்குப் பின்னால் அணிதிரட்டிக்கொண்டதும் அதற்குத் தாக்குப்பிடித்து நிற்கமுடியாமல் இக்குழுக்கள் இங்கிருந்து வெளியேறித் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து கொண்டன.

அங்கும் இந்தக் குழுக்கள் ஒரு திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டுச் செயல்பட முடியவில்லை. ஆனால் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் அவர்களுக்கிடையில் வேறுபட்ட கருத்து இருக்கவில்லை.

மக்கள் சக்தியைத் தனது பலமாக்கி நிலையான ஒரேகொள்கையை நிறைவேற்றுவதையே தமது இலட்சியமாகக் கொண்ட பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு சாத்தானுடனும் இணைந்து கொள்வதில் இந்தக் குழுக்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இல்லை.

''மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலியறுத்தால் சரி'' என்ற பழமொழிக்கேற்ப தாங்கள் ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே மறந்து விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் செயல்படத் தொடங்கினர்.

இலங்கைத் தமிழ்மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ்மக்களின் சம்மதம் பெறாமலே ராஜீவ்காந்தியும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் செய்துகொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து அமைதிப்படை என்ற பெயரில் இங்குவந்த இந்திய இராணுவத்துடன் இந்தக் குழுக்களும் பாதுகாப்பாக வந்துசேர்ந்தன.

ஆயுதங்களைக் களைவதற்கு [வந்தவர்கள்] இந்தக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துபாதுகாப்புமளித்து அழைத்துவந்தனர்.

ராஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு எப்படியோ நடந்த தேர்தலில் போட்டியிட்டு மாகாணசபையின் ஆட்சிபீடத்திலும் இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் அமர்ந்தனர்.

# இயற்கையின் கோரத்தாண்டவம்; பூகம்பத்திற்கு பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் பலி

## மீட்பு வேலைகள் தொடர்கிறது

(டெஹ்ரான்)

ஈரானில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ள பயங்கர புவி நடுக்கம் அனர்த்தங்களினால் இதுவரை பத்தாயிரம் பேர் இறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை ஐ. நாடுகளுக்கான ஈரான் நாட்டுத் தூதுவர் விடுத்துள்ள தகவல்களின் அடிப்படையில் இறந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தையாயிரம் என்று அஞ்சப்படுகிறது. 1978ஆம் ஆண்டு இங்கு இடம் பெற்ற புவி நடுக்கத்தில் இறந்தோர் எண்ணிக்கையும் இருபத்தையாயிரம் என்பது குறிப்பிடத்தக்கது.

சிதைவுகளுக்குள் புதைந்து போய்க் கிடக்கும் சடலங்களின் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், இந்த மீட்பு வேலைகள் முழுமையடையாத நிலையில் இறந்தவர்கனின் எண்ணிக்கையை சரியானபடி மதிப்பிட்டுக் கூற முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த புவி நடுக்கத்தில் முக்கியமான நகரங்களான ஈரான் சென்சாக் ஆகியவை முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதுடன், நூற்றுக்கும் அதிகமான கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நீண்ட கால யுத்தத்தின் பின்பு புனர் நிர்மாண வேலைகளை மேற்கொண்டு வரும் ஈரானில் ஏற்பட்டுள்ள இந்த இயற்கையின் அழிவினால் அந்நாடு பொருளாதார ரீதியாக வெகுவாக பின் தள்ளப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள ஈரான் நாட்டுக்கு மேற்குலக நாடுகளிலிருந்து பல உதவிகள் அனுப்பப்பட்டு வருவதுடன் மேலும் மருத்துவ மற்றும் உதவிகளை உடனடியாக தந்துதவுமாறு ஐ. நாடுகள் சபையிடம் ஈரான் வேண்டுகோள் விடுத்துள்ளது.



வசாவிளான் சந்தியில் கடந்த புதனன்று புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற கடும் சண்டையின் போது விமானத்தாக்குதலுக்கு உள்ளான வீடு ஒன்றையும் கடையொன்றையும் படத்தில் காணலாம்,

### இலங்கைத் தமிழர் பிரச்சினை

## அனைத்து கட்சிகளின் கூட்டம் அவசியம்

### ஜனதாதள் தலைவர் கூறுகிறார்

(சென்னை)

''இலங்கையில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் இன அழிப்புக்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து விவாதிக்கும் வகையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று உடனடியாக கூட்டப்பட வேண்டும்'' என்று ஜனதாதள் தலைவர் திரு. எஸ். ஆர். பாம்பே தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் பொழுது மேற்கண்டவாறு கூறிய திரு. பாம்பே, கூட்டப்படவுள்ள இந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் சகல கட்சிகளும் இலங்கை இனப் பிரச்சினை குறித்து ஒரு பொதுவான முடிவினை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் தமிழ்நாடு உட்பட நாட்டின் எந்தப் பகுதியிலும் தமிழ் போராளிகள் தமது உள் சண்டையின் வன்முறைகளுக்கு களமாக பாவிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

## சோவியத் தலைவர் கொர்பசேவ் பதவி விலகுவாரா?

(மாஸ்கோ)

சோவியத் தலைவர் மிகெல் கொர்பசேவ் தாம் வகிக்கும் ... திகதி மாஸ்கோவில் நடைபெறவுள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தெ...

மேற்படி கம்யூனிஸ்ட் கட்சியின் இக் கூட்டத்திலே சோவியத்தில் ஆரம்பிக்கப்படும் அந்த ஒரு புதியக் கட்சியாயினும் சரி, அது சோவியத் சட்ட அமைவுகளுக்கு உட்...

### நீர்மூழ்கிக் கப்பல் விற்பனையில் மோசடி;

## விசாரணைக்கு உதவ சுவீஸிடம் இந்தியா கோரிக்கை

(டில்லி)

இந்தியாவிற்கு நீர் மூழ்கிக் கப்பல்களை விற்றதற்காக மேற்கு ஜேர்மனி கம்பனி இந்திய அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்கு உதவியளிக்குமாறு இந்திய அரசாங்கம் சுவிஸை கேட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டில் இடம் பெற்ற நீர்மூழ்கிக் கப்பல் கொளவனவு சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு உதவுமாறு தாம் சுவிஸ் அரசாங்கத்தை கேட்டிருப்பதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஷெல் தாக்குதலால் தீவுப்பகுதி மின் விநியோகம் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை நடந்த 'ஷெல்' தாக்குதலினால் பண்ணை கோட்டைப் பகுதியில் உள்ள பாரிய பதினொரு கிலோவாட்ஸ் மார்க்க கம்பிசள் அறுந்ததினால் அப்பகுதிக்கும், யாழ். கரையோர பகுதிகளுக்கும், மண்டைதீவுக்கும் மற்றும் 12 மின் மாற்றிகட்கு மின்தடை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இப்போது 'ஷெல்' தாக்குதல் நடைபெறுவதனால் அப்பகுதியை திருத்த முடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் இலங்கை மின்சாரசபை அறித்துள்ளது.

ஆனாலும் அராலி வீதி, ...

அதே வேளை பண்ணை, குருநகர், மண்டைதீவுப்பகுதிகட்கு இப்போதைக்கு மின் வழங்கககூடிய நிலையில் சூழ்நிலை இல்லை என்றும் மின்சாரசபை அறிவித்துள்ளது.

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் வேண்டுகோள்

(பரந்தன்)

கிளிநொச்சி கச்சேரியைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களையும் எதிர் வரும் 25-ந் திகதி திங்கள் காலை 10-00 மணியளவில் பரந்தன் கமநல சேவைத் திணைக்களத்தில் சமுகம் ...

சாத்தானுடனும் இணைந்து கொள்வதில் இந்தக் குழுக்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இல்லை.

''மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலியறுத்தால் சரி'' என்ற பழமொழிக்கேற்ப தாங்கள் ஆயுதம் ஏந்திய நோக்கத்தையே மறந்து விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையுடன் செயல்படத் தொடங்கினர்.

இலங்கைத் தமிழ்மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ்மக்களின் சம்மதம் பெறாமலே ராஜீவ்காந்தியும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் செய்துகொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து அமைதிப்படை என்ற பெயரில் இங்குவந்த இந்திய இராணுவத்துடன் இந்தக் குழுக்களும் பாதுகாப்பாக வந்துசேர்ந்தன.

ஆயுதங்களைக் களைவதற்கு [வந்தவர்கள்] இந்தக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்துபாதுகாப்புமளித்து அழைத்துவந்தனர்.

ராஜீவ் - ஜே. ஆர். உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு எப்படியோ நடந்த தேர்தலில் போட்டியிட்டு மாகாணசபையின் ஆட்சிபீடத்திலும் இக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் அமர்ந்தனர்.

சிறிலங்கா பாராளுமன்றத்தேர்தலிலும் போட்டியிட்டு வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளாகவும் இவர்கள் போய்ச்சேர்ந்தனர்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் இவற்றைச் செய்துகொண்ட இக்குழுவினர் அதே பாதுகாப்புடன் 'பிள்ளைபிடிகாரர்களாக' மாறி புலிகளை அழிப்பதற்கு ''தமிழ்த்தேசிய இராணுவம்'' என்ற பெயரில் கட்டாய இராணுவம் ஒன்றை உருவாக்கினர்.

இவர்களின் இச்செயல்களினால் மக்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் தேடிக்கொண்டனர். புலிகளுக்கு மக்கள் ஆதரவு பெருகியது.

இந்தியப்படை வெளியேறியது. இக்குழுவினரும் வெளியேறிச் சென்றனர்.

இக் காலகட்டத்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் உறவு வளர்ந்து வந்தது.

இந்த உறவை கெடுத்து இலங்கை அரசுடன்சேர்ந்து புலிகளை அழிப்பதற்கு இந்திய புலனாய்வுப்பிரிவான 'றோ' வின் மூளையுடன் இக்குழுக்கள் செயற்பட்டன. வெற்றியளித்தது.

''மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலியறுத்தால் சரி'' என்ற மனப்பான்மையுடன் பிரேமதாசா அரசும் படைகளும் புலிகளுக்கு எதிராக எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவதாக உறுதியளித்துக் கையொப்பமும் இட்டிருக்கின்றனர்.

இக்குழுவினர்தான் தமிழ்மக்களைப்பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கவும் ஆயுதம் ஏந்தியவர்கள்!

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் முதலாம் சுற்று வியாழன் நடைபெற்ற 4 போட்டிகளுடன் நிறைவுற்றது.

'E' பிரிவில் 2 போட்டிகளும் 'F' பிரிவில் இரண்டு போட்டிகளும் நடைபெற்றன. 'E' பிரிவு போட்டிகளில் ஸ்பானியா 2-1 என்ற வித்தியாசத்தில் தென்கொரியாவைத் தோற்கடித்தது. அதே வேளை உருகுவே 1-0 என்ற வித்தியாசத்தில் தென் கொரியாவைதோற்கடித்தது.

'F' பிரிவு ஆட்டங்களில் இங்கிலாந்து எகிப்தை 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. அயர்லாந்தும் ஒல்லாந்தும் தலா ஒவ்வொரு கோல் போட்டு சரிசம செய்து கொண்டன. இன்று இரண்டாவது சுற்றின் மொத்த எட்டு ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறும்.

## சிவன்கோவிலில்ஷெல்அடி

யாழ். நகரில் அமைந்திருக்கும் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் கடந்த புதன் இரவு கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்ததனால் யாகசாலை மண்டபம்சேதமடைந்துள்ளது

இக் கோவிலின் நித்திய பூசைகள் இதனால் பாதிப்படைந்துள்ளன. கோவில் அர்ச்சகர்கள் தமது பாதுகாப்புக் கருதி கோவிலுக்கு வரவில்லை. இதனாலேயே நித்திய பூசை நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

### ஜனதாதள் தலைவர் கூறுகிறார்

(சென்னை)

''இலங்கையில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் இன அழிப்புக்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து விவாதிக்கும் வகையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று உடனடியாக கூட்டப்பட வேண்டும்'' என்று ஜனதாதள் தலைவர் திரு. எஸ். ஆர். பாம்பே தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் பொழுது மேற்கண்டவாறு கூறிய திரு. பாம்பே, கூட்டப்படவுள்ள இந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் சகல கட்சிகளும் இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஒரு பொதுவான முடிவினை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் தமிழ்நாடு உட்பட நாட்டின் எந்தப் பகுதியிலும் தமிழ் போராளிகள் தமது உள் சண்டையின் வன்முறைகளுக்கு களமாக பாவிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

# சோவியத் தலைவர் கோர்பசேவ் பதவி விலகுவாரா?

(மாஸ்கோ)

சோவியத் தலைவர் மிகெல் கொர்பசேவ் தாம் வசிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தலைவர் கொர்பசேவ் அவர்கள் தான் மேற்கொண்டுள்ள பொருளாதார சீர்திருத்தம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனான உறவு பற்றிய பல விடயங்கள் குறித்து தம்முடன் எவ்வித கலந்தாலோசனைகளையும் மேற்கொள்ளவில்லையென சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த சிலர் குறைகூறி வந்தார்கள்.

இவ்வாறு தம்மைப்பற்றி கட்சிக்குள் குறை கூறப்பட்ட சம்பவங்களே திரு கொர்பசேவ் பதவி விலக அறிவித்தற்கான காரணம் என்று கூறப்படுகின்றது.

தலைவர் கொர்பசேவ் இவ்வாறு பதவி விலகிய போதும், அடுத்தமாதம் 2 ஆந் திகதி மாஸ்கோவில் நடைபெறவுள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தெட்டாவது மாநாட்டில் மீண்டும் அவரே தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

இதே வேளை நேற்று முன்தினம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின பொதுக்கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கொர்பசேவின் பொருளாதாரசீர்திருத்த கொள்கைக்கு ஆதரவு வழங்கக் கூடாது என்று விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவருக்கு எதிராக சாரசாரமான கருத்துக்களும் கொண்டு வரப்பட்டது.

எனினும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் போது பொருளாதார சீர்திருத்த கொள்கைக்கு எதிராகவோ, கொர்பசேவுக்கு எதிராகவோ வாக்குகள் அளிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கம்யூனிஸ்ட் கட்சியின் இக் கூட்டத்திலே சோவியத்தில் ஆரம்பிக்கப்படும் அந்த ஒரு புதியக் கட்சியாயினும் சரி, அது சோவியத் சட்ட அமைவுகளுக்கு உட்பட்டே இயங்க வேண்டும் என்ற முடிவும் கொண்டு வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(யாழ்ப்பாணம்)

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை நடந்த 'ஷெல்' தாக்குதலினால் பண்ணை கோட்டைப் பகுதியில் உள்ள பாரிய பதினொரு கிலோவாட்ஸ் மார்க்க கம்பிசள் அறுந்ததினால் அப்பகுதிக்கும், யாழ். கரையோர பகுதிகளுக்கும், மண்டைதீவுக்கும் மற்றும் 12 மின் மாற்றிகட்கு மின்தடை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இப்போது 'ஷெல்' தாக்குதல் நடைபெறுவதனால் அப்பகுதியை திருத்த முடியாத நிலையில் தாம் இருப்பதாகவும் இலங்கை மின்சாரசபை அறித்துள்ளது.

ஆனாலும் அராலி வீதி. கண்ணாபுரம் ஆகிய மின் மாற்றிகட்கு வியாழன் முதல் மின்சாரம் வழங்கியுள்ளதாகவும் அதே போல் கொன்லென்ற் மின் மாற்றிக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தது.

அதே வேளை பண்ணை, குருநகர், மண்டைதீவுப்பகுதிகட்கு இப்போதைக்கு மின் வழங்ககூடிய நிலையில் சூழ்நிலை இல்லை என்றும் மின்சாரசபை அறிவித்துள்ளது.

### கிளிநொச்சி அரசாங்க அதிபர் வேண்டுகோள்

(பரந்தன்)

கிளிநொச்சி கச்சேரியைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 25-ந் திகதி திங்கள் காலை 10-00 மணியளவில் பரந்தன் கமநல சேவைத் திணைக்களத்தில் சமுகம் தரும்படி கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### இலங்கை

# அரசும்-புலிகளும் மீண்டும் பேச்சுக்கள் நடத்த வேண்டும்

-அமைச்சர் உபேந்திரா

(சென்னை)

''இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் தமது பேச்சுவார்த்தைகளை தொடரவேண்டும்'' என்று இந்திய செய்தி ஒலிபரப்புதுறை அமைச்சர் திரு. பி உபேந்திரா வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேற்கண்டவாறு கூறியதுடன் இரு தரப்பினரும் மீண்டும் தமது பேச்சுக்களை ஆரம்பிப்பதின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுமூகமான ஒரு தீர்வினை கொண்டுவர முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் அப்படி ஒரு பேச்சுவார்த்தை இடம் பெறுமாகில் அதில் விடுதலைப் புலிகளின் தலைவர்திரு.வே பிரபாகரன் உள்ளடங்கியோர் கலந்து கொள்வதுடன்உயர்மட்ட நடவடிக்கையாக அமைய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் அங்கு பேசிய அமைச்சர் உபேந்திரா இந்தியாவின் ஒழுங்குப் பிரச்சினைகளை பாதுகாக்கும் வகையில் தமிழ் போராளிக் குழுக்கள் எவ்வித உள்சண்டையிலும் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

### இனவெறியர்களிடமிருந்து

# தென்னாபிரிக்காவை விடுவிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை

நெல்சன் மண்டேலா நம்பிக்கை

(நியூயோர்க்)

''இனவெறிபிடித்த வெள்ளையர்களிடமிருந்து தென்னாபிரிக்காவை விடுதலை பெறச் செய்யும் காலம் வெகு தூரமில்லை.'' என்று தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பன்னிரெண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமொன்றினை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள தலைவர் மண்டேலா நியூயோர்க்கில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இந்த நம்பிக்கையை தெரிவித்ததுடன் நீண்டகாலமாக அடக்குமுறைகளை மேற்கொண்டு வரும் சிறுபான்மையினரான வெள்ளையரின் இனவெறிக்கு முடிவுகாலம் வந்துவிட்டதாகவும் அவர் ஆருடம் தெரிவித்துள்ளார்.

பாரியார் வின்னி மண்டெலாவுடன் நியூயோர்க் விமான நிலையம் வந்தடைந்த நெல்சன் மண்டேலா தம்பதிகளுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், ஊர்வல நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

குண்டுகள், வெடிகுண்டுகள் ஏவுகணைகள் எதுவும் தாக்க முடியாத கண்ணாடியிலான மேடையில் திரு. மண்டேலாவின் சொற்பொழிவுக்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. பத்தாயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

திரு. மண்டேலா அமெரிக்காவின் பல நகரங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் பற்றிய பேருரையையும் நடத்தவுள்ளார்.

தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத் தடைகளை மேலும் விரிவுபடுத்துவதுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கானநிதி சேகரிப்பும் திரு.மண்டேலாவின் இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் புஷ்சை சந்திக்கவுள்ள அவர் பல விரிவான பேச்சுக்களையும் நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### போராளிகளின் முகாம்கள் மூடப்பட்டன

(சென்னை)

தமிழ் நாட்டில் அமைந்திருந்த சகல தமிழ் போராளிகளின் முகாம்களும் மூடப்பட்டுவிட்டதாக தமிழ் நாடு பொலிஸ் பகுதி தெரிவித்துள்ளது.

பத்மநாபா உட்பட ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்களை சுட்டுக்கொன்றவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாககூறிய பொலிஸ் பகுதியினர், மாநில அரசின் உத்தரவுப்படி தமிழ் போராளிகளின் கைது நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவித்துள்ளது.

# கிளிநொச்சி கச்சேரியில் திருட்டு முயற்சி

(பரந்தன்)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஷெல், மற்றும் துப்பாக்கிச் சூடுத் தாக்குதல்களினால் கிளிநொச்சிக் கச்சேரி பலத்த சேதங்களுக்குள்ளாகியது.

கச்சேரி இடிபாடுகளுக்கு இடையில் சிக்கியிருந்த சில ஆவணங்களைக் கையாட விஷமிகள் சிலர் முயற்சித்துள்ளார்கள்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு.கே.மாணிக்கவாசகர் மேற்கொண்ட நடவடிக்கையினால் திருட்டு முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# கருணாநிதியை பதவிவிலக ராஜீவ் கோருவது அக்கிரமமானது

## — ஜோர்ச் பெர்னாண்டஸ்

(சென்னை)

இந்திய மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ''கருணாநிதி எந்தப் போராளி இயக்கத்தையும் சார்ந்தவரல்லர் என்று கூறினார்.

சென்னையில் இலங்கைத் தமிழ் போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் காரணம் காட்டி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டுமென முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கூறுவது சரியல்ல என்று மத்திய ரயில்வே துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறினார்.

சென்ற செவ்வாய் அன்று நடைபெற்ற துக்ககரமான சம்பவம் தொடர்பாக முதலமைச்சரைக் குற்றம்சாட்டி இவ்வாறு ராஜீவ்காந்தி பேசுவது அக்கிரமமானது என்றார் திரு. பெர்னாண்டஸ். இத்தகைய கேவலமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என தமிழ்ப் போராளிகளை முதலமைச்சர் எச்சரித்ததில் இருந்து அவர் எந்தப்போராளி இயக்கத்திற்கும் சார்ந்துநிற்கவில்லை எனத் தெரிகிறது என்றும் அவர் நிருபர்களுக்கு தெரிவித்தார்.

அரசியல் வாதிகளுக்கு ஞாபக மறதி அதிகம். 1987-ம் ஆண்டு சென்னை விமான நிலையத்தில் ஒரு வெடிகுண்டு வெடித்தது. ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் 40 பேர் மாண்டுபோயினர். அப்போது ராஜீவ்காந்தி ராஜினாமாச் செய்யவில்லையே என்றும், அப்போது இருந்த தமிழக அரசும் ராஜினாமாச் செய்யவில்லையே என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய அமைதிகாக்கும் படை தமிழர்களை காப்பாற்ற அனுப்பப்படுகிறது என்று ராஜீவ்காந்திகூறினார். ஆனால் அந்தப்படை தமிழர்களை கொல்லவும் பயன்படுத்தப்பட்டது.

தற்போது ராஜீவ் காந்தி முதலைக்கண்ணீர் வடிக்கின்றார் என்றும் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

கருணாநிதியைப் பொறுத்தவரையில் கரையோர ரோந்துக் காவல்படை, மத்திய பொலிஸ் படை போன்றவற்றை அனுப்ப வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

கடந்தசில மாதங்களில் மட்டும் சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. எனவே இந்த விஷயத்தில் கருணாநிதியைக் குற்றம் சாட்டிப் பேசுவது சரியல்ல. மேலும் போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து கருணாநிதி நடவடிக்கை எடுத்துள்ளதில் இருந்தும் அவர் எந்தப் போராளிஇயக்கத்தையும்சார்ந்தவர் இல்லை என்றும் தெரிகின்றது என்று நிருபர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சொன்னார்.

### காகித ஆலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா சிங்கள இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் தமிழர்களுடைய வீடுகள் பலவும் புல்டோசர்களினால் தகர்த்தெறிந்துள்ளனர்.

சுங்காங்கேணியில் ஒரு இளம் பெண் சிங்கள இராணுவச் சிப்பாய்களினால் மானபங்கம் செய்யப்பட்டார்.

### மக்சள் அழிவார்கள்

(1 ஆம் பக்கத் தொடர்க்சி)

தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் கைது செய்யப்பட்டுள்ள600 இளைஞர்களில் விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் ரஞ்சன் விஜேயரட்ணா தெரிவித்தார்.

### பீப்பா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலால் பல தென்னை வாழை மரங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதேபோன்று மற்றொரு குண்டு தெல்லிப்பளை மக்கள் சந்தைக்கு அருகாமையில் விழுந்ததில் ஒரு கடை உட்பட பல வீடுகள் தரை மட்டமாகின. இதில் சந்தைக் கட்டிடமும் பலத்த சேதமடைந்துள்ளது.

# வவுனியா அரசாங்க அதிபர் நோச்சிமோட்டை அகதிமுகாமில்

(வவுனியா)

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா அரசாங்க அதிபரின் இல்லம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அவருடைய இல்லத்தின் கண்ணாடிகள் சில உடைக்கப்பட்டன என்றும், அரசாங்க அதிபரை நோக்கிச் சில இராணுவத்தினர் துப்பாக்கியால் குறிவைத்ததாகவும், இதையடுத்து இராணுவ அதிகாரி ஒருவரின் கட்டளையை அடுத்து அரசாங்க அதிபருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதாகவும் தெரி...

அகதியாகஇருப்பதால், மக்கள்படும் கஷ்டங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது என்றும் தெரிவித்தார்.

இவருடன் இணைந்து சுமார் ஏழு வவுனியாக் கச்சேரியைச் சேர்ந்த அதிகாரிகள் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த அதிகாரிகள் ஒவ்வொரு அகதிமுகாம்களுக்கும் சென்று மக்களின் தேவைகளைக் கவனித்து வருகிறார்கள். (தி)

### யாழ் நகர

தங்கி உள்ள பெரியமுகாமிகளாகும்.

பின்வரும் அடிப்படையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

தனிஅங்கத்தவர் -ரூ50.00தும்
2பேர் கொண்ட குடும்பம் -ரூ85.00 தும்
3 ,, ,, -ரூ105.00தும்
4 ,, ,, -ரூ125.00தும்
5 ,, ,, -ரூ155.00தும்
6 ,, ,, -ரூ170.00தும்
7பேரும் அதற்கு மேலும் -ரூ185.00தும்

வழங்கப்படவுள்ளது,

### ரஞ்சன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருலட்சம் தோட்டத் தமிழர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டுமென்று அவசரப்பட்ட பாதுகாப்புராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவே மலையகத்தில் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதற்கும் காரணமெனக் கருதப்படுவதால் பிரேமதாசா அமைச்சரவையில்பெரும்நெருக்கடியை ஏற்படுத்தலாமென்றும் கருதப்படுகிறது.

# வைத்தியர்களை நீக்க

# "இடம் பெயரும் மக்களுக்கு ஒன்றுபட்டு உதவுவோம்"

## வடக்கு, கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இன்றைய நெருக்கடியான நிலையில் நாமனைவரும் ஒருங்கிணைந்து எமது மக்களது இடர்களை முடிந்தவரை போக்க முன்வரவேண்டும். இவ்விடையம் எமது மக்களுக்கு புதிதானவொன்றல்ல. 1958 ஆம் ஆண்டு முதல் பல கட்டங்களில் எமது மக்கள் தாமாகவே பல மாதங்களாக அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களை வைத்துப் பராமரித்துள்ளார்கள் என வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற இராணுவத்தாக்குதல்களால் பெருமளவு மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து அலைந்து திரிகின்றனர். இவர்களுக்கு உதவுவதற்காக பல பொதுஸ் தாபனங்கள் முன்வந்தபோதும் வங்கிகள் செயற்படாமை, எரிபொருள் கிடையாமையால் போக்குவரத்து வசதியின்மை ஆகிய காரணங்களால் இவர்களுடைய அடிப்படை தேவைகளில் எதுவுமே பூர்த்தி செய்யப்பட்டதாக இல்லை.

எமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் ஒவ்வொருவரும் எந்த வகையில், ''நான் எனது மக்களுக்கு உதவ முடியும் என்று சிந்தியுங்கள். உங்களுக்கு அருகில் உள்ள முகாமில் மக்களைப் பராமரிக்கும் பொறுப்பேற்கலாம், தொண்டர்களாக செயற்படலாம், தேவையான பொருளுதவிகளை செய்யலாம். மருத்துவர்களும், மருத்துவத் தொண்டர்களும் முகாம்களில் மருத்துவ சேவையை வழங்கலாம்.

நேரடியாக உதவிகளை வழங்க முடியாதவர்கள் எமது மாவட்ட அலுவலகங்கள் மூலமாக உங்களுடைய பங்களிப்புக்களை வழங்க முடியும் அல்லது இப்பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், எவ்வகையிலாவது உங்களுடைய பங்களிப்பை சொத்து சுகங்களை இழந்து ஆதரவற்ற நிலையில் உள்ள எமது மக்களுக்கான நிவாரணப் பணிகளில் வழங்க முன்வரவேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்டபம் முகாமில் தமிழ் அகதிகள் தொகை அதிகரிப்பு!

(சென்னை)

இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளில் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் தொடர்ந்து கடும் சண்டை நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இராமேஸ்வரம் வரும் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்து வருகிறது. கடந்த ஒருவாரத்தில் இரண்டாயிரமாக மண்டபம் முகாமுக்கு வந்துசேர்ந்த அகதிகளின் எண்ணிக்கை நேற்று முன்தினம் மூவாயிரத்து எழுபத்தைந்தாக அதிகரித்திருக்கிறது. இவர்களில் பெண்களும் குழந்தைகளுமே அதிக எண்ணிக்கையில் வந்துள்ளனர். இந்த விபரம் தமிழ் நாடு அரசின் செய்திக் குறிப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்டதாகும்.

## இந்தியக் கடற்படை ரோந்து

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் யுத்தம் காரணமாக பாக்கு நீரிணைப் பகுதியில் இந்தியக் கடற்படையின் ரோந்தும் காவல் நடவடிக்கையும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## இனக்கலவரம்பரவுகிறது! 100பேர்பலி

இலங்கையின் தென்மாகாணத்தில் ஆரம்பமான தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரம் இப்பொழுது மத்திய மாகாணப் பகுதிகளுக்கும் பரவி விட்டதாகவும் கடந்த சில தினங்களுக்குள் சுமார் நூறு தமிழர்கள் இக்கலவரங்களினால் கொல்லப்பட்டிருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

## உணவு விநியோகிக்க படையால் முடியவில்லை

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிப்போராளிகளுக்குமிடையில் கடும்

### வாகனம்

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

ளிகள் அதை வயலில் விட்டுவிட்டு படகு மூலம் இலங்கைக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

### உட்பூசலே

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசும் காரணமாக இருக்கலாம் என நாம் சந்தேகப்படுகிறோம். என தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாபாவுக்கு

(1 ஆம் ப்க்கத் தொடர்ச்சி)

கே. பத்மநாபா கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்தே இந்தப் புதிய தெரிவு நடைபெற்றது. நேற்று முன்தினம் இரவு சென்னையில் இடம்பெற்ற ஈ.பி. ஆர். எல். எவ். இயக்க மத்தியக் கமிட்டியின் சிறப்புக் கூட்டத்திலேயே இத்தெரிவு நடைபெற்றதாக அறிவிக்கப் பட்டது.

### ஸ்ரீலங்கா . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியளித்ததாகவும் தெரிவித்தார்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் நாசி ஜேர்மனியில் ஹிட்லரின் அமைச்சரவையில் இருந்த அண்டப் புழுகன் தான் கோயல்பஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

### வள்ளங்களிலும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில படகு அகதிகள் வடக்கு நோக்கி வருவதை விரும்புகிறார்களாம்.

படகு அகதிகள் திருக்கோ

திரு. பெர்னாண்டஸ். இத்தகைய கேவலமான நடவடிக்

என்று ராஜீவ்காந்திகூறினார். ஆனால் அந்தப்படை தமிழர்

தில் ஒரு கடை உட்பட பல வீடுகள் தரை மட்டமாகின. இதில் சந்தைக் கட்டிடமும் பலத்த சேதமடைந்துள்ளது.

அதிக எண்ணிக்கையில் வந்துள்ளனர். இந்த விபரம் தமிழ் நாடு அரசின் செய்திக் குறிப்பு ஒன்றிலிருந்து பெறப்பட்டதாகும்.

இரவு சென்னையில் இடம் பெற்ற ஈ.பி. ஆர். எல். எவ். இயக்க மத்தியக் கமிட்டியின் சிறப்புக் கூட்டத்திலேயே இத் தெரிவு நடைபெற்றதாக அறிவிக்கப் பட்டது.

# வவுனியா அரசாங்க அதிபர் நொச்சிமோட்டை அகதிமுகாமில்

(வவுனியா)

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா அரசாங்க அதிபரின் இல்லம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

அவருடைய இல்லத்தின் கண்ணாடிகள் சில உடைக்கப்பட்டன என்றும், அரசாங்க அதிபரை நோக்கிச் சில இராணுவத்தினர் துப்பாக்கியால் குறி வைத்ததாகவும், இதையடுத்து இராணுவ அதிகாரி ஒருவரின் கட்டளையை அடுத்து அரசாங்க அதிபருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் வவுனியா நகரத்தில் இருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ள நொச்சிமோட்டை என்னும் தமிழ்க் கிராமப்பகுதி பாடசாலையில் அகதியாகத் தங்கியுள்ளார்.

அவர் தமது இல்லத்தை விட்டு அகதியாக வெளியேறியது பற்றி அவரிடம் கேட்டபோது மனிதர்கள் இல்லாத இடத்தில் இருந்து கொண்டு, வெறும் மரங்களையும், கட்டடங்களையும் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. இக்காரணத்தினால் தான் அகதியாக வெளியேறியுள்ளேன்.

அகதியாகஇருப்பதால், மக்கள்படும் கஷ்டங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது என்றும் தெரிவித்தார்.

இவருடன் இணைந்து சுமார் ஏழு வவுனியாக் கச்சேரியைச் சேர்ந்த அதிகாரிகள் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த அதிகாரிகள் ஒவ்வொரு அகதிமுகாம்களுக்கும் சென்று மக்களின் தேவைகளைக் கவனித்து வருகிறார்கள். (தி)

## யாழ் நகர

தங்கி உள்ள பெரியமுகாங்களாகும்.

பின்வரும் அடிப்படையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

தனிஅங்கத்தவர் -ரூ50.00தும்
2பேர் கொண்ட குடும்பம் -ரூ85.00 தும்
3 ,, ,, -ரூ105.00தும்
4 ,, ,, -ரூ125.00தும்
5 ,, ,, -ரூ155.00தும்
6 ,, ,, -ரூ170.00தும்
7பேரும் அதற்கு மேலும் -ரூ185.00தும்

வழங்கப்படவுள்ளது,

## ரஞ்சன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருலட்சம் தோட்டத் தமிழர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டுமென்று அவசரப்பட்ட பாதுகாப்புராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவே மலையகத்தில் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதற்கும் காரணமெனக் கருதப்படுவதால் பிரேமதாசா அமைச்சரவையில்பெரும்நெருக்கடியை ஏற்படுத்தலாமென்றும் கருதப்படுகிறது.

## இந்தியக் கடற்படை ரோந்து

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் யுத்தம் காரணமாக பாக்கு நீரிணைப் பகுதியில் இந்தியக் கடற்படையின் ரோந்தும் காவல் நடவடிக்கையும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## இனக்கலவரம்பரவுகிறது! 100பேர்பலி

இலங்கையின் தென்மாகாணத்தில் ஆரம்பமான தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரம் இப்பொழுது மத்திய மாகாணப் பகுதிகளுக்கும் பரவி விட்டதாகவும் கடந்த சில தினங்களுக்குள் சுமார் நூறு தமிழர்கள் இக்கலவரங்களினால் கொல்லப்பட்டிருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

## ஸ்ரீலங்கா . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியளித்ததாகவும் தெரிவித்தார்.

இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் நாசி ஜேர்மனியில் ஹிட்லரின் அமைச்சரவையில் இருந்த அண்டப் புழுகன் தான் கோயல்பஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# வைத்திய இடர்களை நீக்க செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

இன்றைய நிலையில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றியும் கோட்டை இராணுவ ஷெல் தாக்குதலால் மூடப்பட்ட யாழ். வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதைப் பற்றியும், இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடு பற்றியும் இவற்றிக்கெல்லாம் தடைக்கல்லாய்இருக்கும் காரணங்களை அறிந்து அதுசம்பந்தமாக அனைத்துதரப்புடனும் கலந்து பேசி பரிகாரம் காணும் நோக்குடன் நேற்று முன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கை பிரதிநிதிகளான பிலிப் கொம்ரெசாவும், பீற்றர் லிங்லர் ஆகியோர் விமான மூலம் யாழ். குடாநாட்டை வந்தடைந்தனர்.

இவர்கள் பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்திய சாலையில் உள்ள எல்லைகள் இல்லாத பிரான்ஸ் நாட்டு வைத்தியர்களுடன் கலந்தாலோசித்ததுடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்ததுடன் தற்போது இதற்கு பதிலாக இயங்கும் மானிப்பாய் வைத்தியசாலைக்கும் விஜயம் செய்து அங்குள்ள நோயாளர்களையும் பார்வையிட்டனர்.

இதனுடன் யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளை சந்தித்து கலந்தாலோசித்ததுடன் யாழ். போதனா வைத்தியசாலை அத்தியட்சகர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் உட்பட ஏனைய வைத்திய அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தனர்.

மேலும் கிளிநொச்சி வைத்தியசாலை நிலைமை பற்றியும் கிளிநொச்சி வைத்திய சாலை அதிகாரிகளுடன் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கலந்தாலோசித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## உணவு விநியோகிக்க படையால் முடியவில்லை

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப்போராளிகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெறுகிறதென்றாலும் கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாக இலங்கையின்பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் உணவுப் பொருள்களை கல்முனைக்குக்கூட எடுத்துச் செல்ல முடியவில்லையென்றும் கிழக்கு மாகாணத்தில் உணவு விநியோகம் சீராக நடைபெறமுடியாமலுள்ளதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்திய வானொலிச் செய்தியும் இதை உறுதிப்படுத்தியது.

## வள்ளங்களிலும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில படகு அகதிகள் வடக்கு நோக்கி வருவதை விரும்புகிறார்களாம்.

படகு அகதிகள் திருக்கோணமலைப் பகுதியிலுள்ள புடவைக்கட்டு என்ற இடத்திலிருந்து இரவு பயணத்தை மேற்கொண்டு முல்லைத்தீவு வந்தடைகிறார்கள். திருக்கோணமலைப் படகு அகதிகளுடன் மட்டக்களப்பில் இருந்து புலம்பெயர்ந்த அகதிகளும் முல்லைத்தீவு சேர்ந்துள்ளார்கள்.

கும்புறுப்பிட்டி, அநுராதபுரம் சந்தி, குச்சவெளி, நிலாவெளிச்சந்தி, திருமலை நகரம், உவர்மலை ஆகிய இடங்களிலிருந்து படகுகளில் வந்த சுமார் 2000 குடும்பங்கள் புதுக்குடியிருப்பு, செம்மலை, அலும்பில், தண்ணீர் ஊற்று, முள்ளியவளை ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

சுமார் 2000 குடும்பங்களை சேர்ந்த 10 000 வரையிலான அகதிகள் வந்து சேர்ந்துள்ளார்கள்.

அநேகமான அகதிகள் உடுத்த உடுப்புடன் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளார்கள் வவுனியாவிலிருந்து வெளியேறியவர்கள் நெடுகேணி, தண்ணீர் ஊற்றுக் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்த மக்களின் முதன்மைத் தேவைகளான மருத்துவவசதி, உடுபிடைவை வைத்தியவசதி ஆகியவற்றை அப்பகுதி வட்ட அவையும், சிற்றூர் அவையும் கவனித்து வருகின்றன. மனிதநேய ஸ்தாபனங்களும் சேவையில் ஈடுபட்டுள்ளன.

# யாழ் நகரில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் தற்போது திருடர் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதால் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடர்கள் வீடுகளிலும், கடைகளிலும் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்கள்.

சில பகுதிகளில் திருடர்களைப்பிடிக்க கண்காணிப்புக் குழு இயங்கிவருகின்றது: நேற்று சென்ஜோன்ஸ் கல்லூரிக்குச் சொந்தமான சில உபகரணங்களைப் பகல் வேளையில் கொள்ளையிட முயன்ற திருடரை கண்காணிப்புக் குழுவினர் தடுத்து பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கச்சேரிப் பகுதியில் கடையொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்குள்ள பொருட்களைக் கொள்ளையடித்துள்ளனர் இதேபோல் மாட்டின் வீதியிலுள்ள இரு வீடுகளிலும் கொள்ளை முயற்சிமேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கொள்ளை முயற்சியில் இருந்து தமது உடமைகளைக் காக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு கண்காணிப்புக் குழுவினர்மக்களுக்குவேண்டுகோள்விடுத்துள்ளனர். (மு)

# யாழ். வைத்தியசாலை திங்கள் திறக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையை மீண்டும் திறப்பது பற்றித் தீவிரமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆலோசித்து வருவதால் வருகிற திங்கட்கிழமை அளவில் திறந்து வைப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார்.

மேலும் இப்போதனாவைத்தியசாலை திறந்து வைக்கப்படும் இடத்து நகரப்பகுதிக்கு சனநடமாட்டம் அதிகரிப்பதுடன் வைத்தியசாலையையும் அதனை அண்டியபகுதியையும் அமைதி வலையம் ஆக்கப்படுவதற்கான வாய்ப்புகள் தென்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# ஜனசக்தி முத்திரைக்கு பொருட்களைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் தங்களுக்குரிய உணவு முத்திரைக்குரிய பொருட்களையும், ஜனசக்திக்குரிய பொருட்களையும் பெற்றுக்கொள்வதுடன்ரொக்கத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படும் பொருட்களையும் தங்கள், தங்கள் கிளைகளில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கக் காரியாலயமும், கிளைகளும் கடந்தசனிக்கிழமையில் இருந்து இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

## உணவு பெற

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டரும் சில அதிகாரிகளும் குறிப்பிட்ட இராணுவ அதிகாரியுடன் பேசி மேற்படி அனுமதியைப் பெற்றுக் கொண்ட போதிலும், இராணுவ அதிகாரியினால் அறிவித்தபடி. குறிப்பிட்ட நேரத்திற்கு யுத்தம் நிறுத்தி வைக்கப்படவில்லையாம்.

மேற்படி களஞ்சிய அறையிலிருந்து பொருட்கள் ஏற்றும் சமயத்தில் இராணுவத்தினரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாம் இதனால் சிங்களப் பகுதி சங்கங்களுக்கு இரண்டு லொறிகளிலும், தமிழ்ப் பகுதி சங்கங்களுக்கு மூன்று லொறிகளிலும் அரிசி மட்டும் ஏற்றி வரப்பட்டதாகக் கூறப்பட்டது.

பட்டப்பகலில் கடைகளை உடைத்துத் திருட்டு வேலையில் ஈடுபடும் கொள்ளையரை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக இராணுவதரப்பில் கூறப்பட்டதாம்.

வவுனியா நகரப்பகுதியில் மக்கள் எவரும் இல்லாத காரணத்தினால் கடைகளிலும், வீடுகளிலும் பொருட்களை கொள்ளையடித்துச் செல்வதில் பலர் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தினரும் கடைகள் வீடுகளை உடைத்துக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவருகின்றனர். (தி)

## தேசிய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு தொண்டர் படை.

சிறிலங்காவில் மாகாண ரீதியாக மாகாண முதல்வர்களின் கீழ் பாதுகாப்புத் தொண்டர் படைகள் அமைக்கப்பட்டு வருவதாக அரசு அறிவித்திருக்கிறது.

## அமைச்சர் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறது என்று இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சிறிலங்கா அரசியல் சிரேஷ்ட அமைச்சருமான சௌமிய மூர்த்தி தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

வடக்கிலும் கிழக்கிலும், விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசபடைக்குமிடையில் நடைபெற்று வரும் யுத்தம் பற்றிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் அதன் தலைவர் தொண்டமானும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் எந்தப் பிரச்சினைகள் தொடர்பாக கலவரங்கள் நடந்தாலும் மலையகத்தில் தோட்டத் தொழிலாள இளைஞர்கள் கைது செய்யப்படுவது வழக்கமாகி விட்டது என்றும் தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமானால் இந்தக் கைது செய்யும் நடவடிக்கை முற்றாக நிறுத்தப்படவேண்டுமென்றும் அமைச்சர் தொண்டமான் கூறியிருந்தார்.

வடக்லும் கிழக்கிலும் நடைபெறும் ''சம்பவங்களை எதிர்த்து அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதல்ல வென்று அரசாங்கம் அடிக்கடி கூறிவந்தாலும் மலையகத்தில் அரசின் நடவடிக்கைகள் எதிர்மாறாக இருப்பதாகவே தோன்றுகின்றதென்றும் தொண்டமான் கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.